1994 மார்ச் 19]

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், வட சென்னிமலையில் உள்ள அறிஞர் அண்ணா கலைக் கல்லூரிக்குப் போதுமான கட்டிட வசதி, ஆய்வக வசதி, நூலக வசதி ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இதுபற்றி கோரிக்கை கல்லூரி முதல்வரிடமிருந்து பெறப்படவில்லை. கோரிக்கை வரப்பெற்றால், தேவையின் அடிப்படையிலும் நிதியாதாரத்தின் அடிப்படையிலும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆத்தூர், அறிஞர் அண்ணா கலைக் கல்லூரியானது, ஆத்தூர், சின்னசேலம், தலைவாசல் ஆகிய பகுதிகளுக்கு மையப் பகுதியாக உள்ளதாகும். சேலத்திற்கும், விருத்தாசலத்திற்கும் இடையே 60 கிலோ மீட்டருக்கு இடையில் வேறு கல்லூரி கிடையாது. ஆகவே இப்போது இருக்கிற சூழ்நிலையை அனுசரித்து, விரைவில்—அங்கு நூலகத்திற்கும், ஆய்வகத்திற்கும் மற்றும் வகுப்பறைகளுக்கும் போதுமான கட்டிடம் இல்லாததினால்—மாண்புமிகு பொன்மனம் படைத்த கல்வி அமைச்சர் அவர்கள், அதனை பரிசீலிக்க வேண்டுமாறு தாழ்மையோடு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோரிக்கைகள் முழுமையாக வரப்பெற்றால், நிதியாதாரத்தின் அடிப்படையில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 54, திரு. வி. கே. சின்னசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

54—

அரசு மறுவாழ்வு இல்லங்களில் தொழிற் பயிற்சிப் பள்ளி துவங்குதல்

*22790— திரு. வி. கே. சின்னசாமி :

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

TRUTH ALONE TRIUMPHS

(அ) தமிழகத்தில் உள்ள அரசு மறுவாழ்வு இல்லங்களில் தொழிற் பயிற்சிப் பள்ளி துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பதில் இல்லை என்று சொல்கிறார்கள். காரணம், தொழிற் பயிற்சி மையங்கள் (ஐ.டி.ஐ.), தொழிலாளர் நலத் துறையின் சார்பாக வருகின்றன என்ற காரணத்தால். நான் கேட்பது, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் மூலமாக, எங்கெங்கு மறுவாழ்வு இல்லங்கள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் உடல் ஊனமுற்றவர்களுக்கும், அவர்களுடைய குழந்தைகளுக்கும் அங்கே பயிற்சியளித்து, அவர்களுக்கு வேலை கொடுக்கிற வாய்ப்பை உருவாக்கக் கூடிய அளவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்களுடைய காலத்தில் துவங்க இருப்பதாக நான் அறிந்தேன். ஆகவேதான் நான் அந்தக் கேள்வியைக் கேட்டேன். சமூக நலத் துறையின் மூலமாக இப்படிப்பட்ட ஐ.டி.ஐ. திட்டங்கள் இருப்பதாக அறிகிறேன். ஆகவே இப்படிப்பட்ட திட்டம் உண்டா என்பதை மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சமூக நலத் துறையின் மூலமாக நடத்தப்படுகின்ற மறுவாழ்வு இல்லங்களில், இதுபோன்ற தொழிற் பயிற்சி மையங்கள் நடத்தப்பட்டு அவற்றில் கைத்தறி, விசைத்தறி, பாய் பின்னுதல், தச்சுவேலை போன்ற பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அவர் கேட்டிருக்கிற ஐ.டி.ஐ. என்பது, கடலூர் மறுவாழ்வு இல்லத்தில் 'ஸ்வெடர் மெட்ஸ்' என்ற மறுவாழ்வு இல்லம், தொழிற்சாலையில் அமைக்கப்பட்டு, அங்கே பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.